உ

வேலுமயிலுந் துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(எட்டாம் பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்

கிரீன் லேபில் ரிகார்ட்.

சங்கீத வித்வான்

S. V. சுப்பையபாகவதர் பாடியது.

பிளேட் நே, 2469 நாற்பது வேலி பூமி

வேதியர் விருத்தம்

நாற்பது வேலிபூமி கடவு நட்டாகவில்லை
பார்ப்பதுமில்லை சைவப்பழமது தின்றாய் பண்ணை
கார்ப்பதுமில்லை யுன்னைக்கைவிட மனதுவல்லை
சேர்ப்பதாலாவ தில்லைச் சேரியிற் றொலைந்துபோடா.

பிளேட் நே, 2809 { ஜாதிகுலம் பிறப்பென்னும்
தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதா

இராகம் கரகப்பிரியா விருத்தம்

ஜாதிகுலம் பிறப்பென்னும் சந்தேகம் தெளியாது
தானாய் நிற்கும்
பேதகுணம் பற்றறுத்து பேரின்பம் வருஷித்து
பேணிக் காக்கும்
ஆதி பராபரமென்னும் திருச்சிற்றம்பலத்தை
கண்டானந் திக்க
வேதமொழி விளங்கிவரும் திருவாயால் விடைகொடுக்க
வேண்டு மையே.

இராகம்-மாஞ்சி-தாளம்-ரூபகம்.

தில்லை யம்பல ஸ்தலமொன்றிருக்குதாம் என்னையனே
தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதாம் கண்டபேர்க்கு
ஜனன மரண பிணியைக் கருக்குதாம் தி

உயருஞ் சிகரக் கும்பந் தெரியுதாம் என்னையனே
உயரும் சிகரக் கும்பம் தெரியுதாம் பார்த்தபேர்க்கு
உள்ளங் குளிரக் கருணைபுரியுதாம் தி

போய்வருக உத்தாரம் தாருமே பொன்னடித்தாள்
போற்றுவேன் திருக்கண்ணால் பாருமே தி

பிளேட் நே. 1707 இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே பித்

அநுபல்லவி.

மற்ற மருந்துகள் தின்றாலு மூன்னுக்கு
வல்லே வல்லே ஐயோ அடிமை பித்

சரணம்.

பாம்பு புலியு மெய்ப்பாடுபட்டு தேடி
பார்த்துப் பயிரிட்டது—அந்த
பாரளந்த திருமாயனும் வேதனும்
பார்த்துக் களித்த துண்டு
பார்வதி யென்றொரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு—இன்னம்
பாதியிருக்குது பறையா நீயும் போய்
பாரென்றுத்தாரம் தாரும்

பிளேட் நே, 2616 { எகிலம்புலம் கார்க்கும் / சொல்லும் வார்த்தை }

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

எகிலம் புலம் கார்க்கும் வள்ளி
எழில் என்னசொல்வேன் எ

அநுபல்லவி.

மீனலோசனி	பாலனை	
வேலனு	க்காய்	
ஜனித்து சால	வுறக்காய் மதித்து	ஏகி

சரணம்.

அஞ்சுகமும் தன்குல	மென்றே யிவள்	
அருங்குரல்	கேட்டு வருகுதே	
அடர் வனத்திலுள்ள	மானினங்கள்	
அக்கண்ணைக் கண்டு	முருகுதே	
மிஞ்சும் சௌந்தர்யம்	பெருகுதே	
வெற்றிக் குகனை	யுருகிங்கு	
கத்திக்குரல்சோர	வருகுதே	ஏகி

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சொல்லும் வார்த்தையைக்	கேளம்மா தள்ளாதம்மா	
சொல்லும் வார்த்தையைக்	கேளம்மா	சொ

அநுபல்லவி.

அல்லும் பகலும் இந்த அவஸ்தையை நீ விடுத்து
அவனியில் தொழிலற்று இருப்பாய் நீ செவிகொடுத்து சொ

சரணம்.

உனக்காகவே	நான்சொன்னேன்	
ஓஹோ இந்த	க்ஷணமே	
மனக்கவலை	கொள்ளாதே	
மானிலத்தி	யல்புதான்	சொ
வேறொரு	வருக்காக	
வேண்டினேன்	இல்லையம்மா	
ஆறுமுகனே	சொந்த உன்	
ஆசை மணாள	னம்மா	சொ

R. நடராஜ ஆச்சாரி பாடியது.

பிளாக் லேபில்.

பிளேட் நே, 2430. { பாம்பு விபரம் சொல்வேன் / கோட்டை முத்துக்காக }

இராகம்-புன்னாகவராளி-ஆடதாள-சாப்பு.

பல்லவி.

பாம்பு விபரம் சொல்வேன்—அம்மா
பாராளும் ராணியே கேளா யம்மா
இராகவா கோபாலா அதிதேவுடே
ஆடுறான் பாடுறான் நின்னெதிர்க்கக் கூத்தாடுறான் பா

அநுபல்லவி.

சும்மா விந்தநாகந் தானும்—வெகு
சுத்தக் குணமுள்ள புத்திருக்கும்
மாணிக்கப் பாம்புயிது—தாயே
பாட்டுகேள் பாடுமே தேடுமே நாடுமே
அம்பா பத்துவிதப் பாம்பு—நீ
பார்த்து மனமகிழ்ந்து கொள்வாயம்மா பா

சரணம்.

கொல்லுங் குணமுடைய—ஒரு
கொம்பேரி மூக்கனைப் பாரும் நீ அம்மா பா

இராகவா கண்கள் களிக்கப் பார்த்து
போவோம் வா பா

இன்னமும் அனேகபாம்பு அம்மா
என்னிட மிருக்குது சொன்னே னம்மா பா

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-திஸ்ரம்.

கொட்டை முத்துக்காக வெள்ளைக்குருடனுக்கிடுவாள்
ஆமணக்க முத்துக் குறைவான திறலே
அந்த வல்லி என்மேலே
கோபஞ் செய்வா ளப்பாலே கொ

கொட்டை முத்துக்காக வெள்ளைக்குருட ளுக்கிடுவாள்
ஆமணக்க முத்துக் குறைவான தினாலே
அந்த வல்லி எனமேலே
கோபஞ் செய்வா ளப்பாலே
இனியார் தடுத்தாலுங் கேளாளேயோ
பாய்வாள் புலிபோலே கொ

கொட்டை முத்துக்காக வெள்ளைக்குருட ளுக்கிடுவாள்
என் குலையைத் தின்றுடுவாள்
என் உயிரைப் போக்கிடுவாள்
இனியார் தடுத்தாலுங் கேளாளேயோ
பாய்வாள் புலி போலே கொ

ஆரியகானசபா

M. S. ராமச்சந்திர ஐயர் பாடியது.

பிளேட் நே, 5219 { பைசிகல்வண்டிக்கும் மோட்டார்
தந்தேன் வந்தனம்

இராகம்-ஜாமுலகுதரேடிக்-திஸ்ரம்.

பல்லவி.

பைஸிக்கில் வண்டிக்கு மோட்டார் கார் வண்டி
பலே பலே பலே பைஸி

அநுபல்லவி.

பைஸிக்கல் தான் பல்லுடைக்கும்
பாட்டையிலே சென்று
கோட்டையிலே சேரும்
மோட்டார் கார் வண்டி பைஸி

சரணம்.

வேக மதிக மாய்ப் போகும்
தேக மதிக மாய் நோகும்
போகும் புகையும் ரயில் வண்டிபோல்
அனேகமா யோடும் ரயிலுக்குமேல்
அப்போ விதவிதமாய்க் குதிரை வண்டி
அதோ மிரண்டு போகுதே குதிரை வண்டி
அதிலேறிபோறவரும தெண்டி

அந்த ஜட்கா வண்டி
அந்தவழிக்காகாத வண்டி
வந்த ஸ்டேஷனும் கிண்டி
வனத்தினி லோடுது ஜண்டி
வரும் வேளையிலே
சகி மாமயிலே
வண்டிமேல் வண்டி விழுந்து பு
ரண்டு கிடந்து செய்தது சந்தடி
மண்டை பிளந்தது மேஸ்திரி
கண்டு வந்தேனிதோ சாஸ்திரி பைவி

காமிக் பாட்டு.

பல்லவி.

தந்தேன் வந்தனம்
தாளடிக்கே தாளடிக்கே
சபையோர்களே யிப்பதி
உப்ய பாதங்கள் கதி தந்

அநுபல்லவி.

சந்ததமும் எந்தனைக் காரீர்
அருளும் தாரீர்
கருணை பாரீர்
சந்தோஷமாய் சேரீர்
எந்தனை ரக்ஷித்து
பந்தமே சிக்ஷித்து
சொந்தமா யாண்டருளுவீர் தந்

பிளாக் லேபில் ரிகரர்ட்.

மிஸ் S. R. கமலம் பாடியது.

பிளேட் நெ, 2274. { புவிராஜனே / காட்சி கண்காட்சியே

இராகம்-விவர்தினி-தாளம்-ஆதி.

பல்லவி.

புவிராஜனே புண்யாகரா புகழ்
பூஷணனே புருஷார்த்தனே புவி

அநுபல்லவி.

கவிமாரனே கமழ் தீரனே
கருணைப் பிரதாபா உயர் சுப்ரதீபா புவி

சரணம்.

புவிமூலமாதர் தமை ரக்ஷிக்க
குளிர் தென்றல்வாடை மிகவே என்மீதே
மேவி வாழ்சுக மிதமாக நான்
தருணம் இவ்வேளை வரவேமுன் நானே புவி

இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

காட்சி கண்காட்சியே திருவனந்த புரத்தின் கா

அநுபல்லவி.

மாட்சிமை தங்கிடும் ஆ
சாட்சி செய்யுந் தாட்சி யில்லா கா

சரணம்.

மாதரும் மாரியாக பெய்யுந் தரும நீதியே
மாநிலம் புகழும் மலை யாள மெனும் க்யாதியே
மாபலா வாழை தென்னைகள் சூழ்ந்து
நிழலே தரவே மா மடல்கள் சாய்ந்து—சுகந்த
வாசனை புஷ்பத் தென்றலும வாய்ந்து
பரிமளிக்கும் சாரம் இணையற்ற சிங்காரம்
தன்னைச் சொல்வோர் வாசம் போராத விபகாரமிது கா

பார்புகழும் பத்மநாபன் சன்னதி யமைந்ததும்
கோவிலெதிரே இரண்டு குளங்களிசைந்ததும்
கோடா கோடியாகச் செலவிட்டு
புத்தங் கச்சேரி என்றமைந்த ஹைகோர்ட்டு
அதின் எதிர் மாதவராயர் ஸ்டேட்டு
சுற்றிலுங் கம்பி கேட்டு சூழ்ந்த போலீஸ் பீட்டு
சுந்தரன் தமிழ்ப் பாட்டு சொல்லக் கமலம் கேட்டு-இது கா

ப்ளேட் நெ, 5218 { தேவகுணாளா / சந்திரமதி அகவல் }

இராகம்-மால்கோஷ்-தாளம்-திஸ்ரம்.

பல்லவி.

தேவகுணாளா திருமலர்த்தாளா
தேடியே வந்தேன் திறல்வலி தோளா தே

அநுபல்லவி.

ஜீவ ரக்ஷகனே சின்மய தேவா
பாப சம் ஹாரா பாலிக்க வாவா தே

சரணம்.

பதமே நம்பி பாரினில் நானே
கதியென்று வந்தேன் காருண்ய தேனே
நிதமுந்தன் நாமம் நினைத்திடு வேனே
அதிபதி காரும் அடிபணிந் தேனே தே

சந்திரமதி அகவல்.

இராகம்-நாதநாமக்கிரியை.

என்னுருயிரே எனது கண்மணியே
முன்னாளி லுங்களையர் முக்கண்ணனை நோக்கி
அன்ன முண்ணுமல் அருந்தவம் செய்தார்
பிள்ளையில்லாமல் பெருந்தவம் செய்தார்
வெள்ளை விடையோன் விமலனு ருளினுல்-நீ
கருவுரு வாகியே காரண மாகியே
திருவுரு வாக ஜெனிக்க என் வயிற்றினில்-நீ
ஜெனித்த ஓராமாதம் உடலது தளர்ந்து
ஈராமாதம் இடையது தளர்ந்து
பச்சை நரம்புகளோடி பால்முகம் சுரந்து
மூன்றும் மாதம் முகமெலாம் வெளுத்து
மூலை நுனி கருத்து
நான்காம் மாதம் நசுக்கிய மசக்கை-அட
ஐந்தாம் மாதம் அழகு சீமந்தம்
ஆறுமாதம் அடிவயர் கனத்து அரையது நொந்து
ஏழிமாதம் என்னுவுக் கினியதை புசித்தேன்
எட்டாம் மாதம் பட்டணமரிய யென் பாங்கியே
தொட்டுமே பட்டு பாவாடை யுடுத்தினேன்
ஒன்பதாம் மாதம் உன் மாமன்மார்வந்து ஓவிய முடனே
எந்தனுக் கென்று சீமந்தம் செய்ய
பத்தாமாதம் பாலகா உன்னை மெத்த வேதனையால்
நெற்றியின் வேர்வை நிலத்தினில் வீழ்க
பற்றியே யுன்னை பாலகா பெற்று
இந்த பாம்புக் கிட்டேன் பாலரா

குழந்தைதான் பிறந்தா யென்று
உங்களையர் புவிராஜர் கேட்டு
கொள்ளை கொள்ளை என்று கோடிபொன் தான மீய்ந்தார்
வேதமோதும் வேதியர்க் கீய்ந்தார்
பின்னும் வண்டியில் சக்கரை வைத்துமே வழங்கினர்
ஐந்து வயதுடன் அருமையாய் வளர்ந்து நீ வருகையில்
உன்னை பள்ளியில் வைத்து பாங்குடன் வித்தையைக்
கற்று வருகையில் நீ வேட்டைக்குச் சென்று
வேட்டைகளாடி வீட்டிற்கு வந்தால்
உன்னருகில் தாதிகள் ஆலாத்தி செய்ய-உன்
பக்கத்தில் தாதிகள் பணிவிடை செய்ய
இத்தனை வகையுட னிருந்திடப் பார்த்தேன் இப்போது
உந்தன் பக்கத்தில் நாய்நரிகள் பார்த்துமே யிருக்க
கொள்ளிவாய்ப் பிசாசும் கூடியே யிருக்க
இப்படி யுனைப் பார்க்கவும் பிரம்ம னெழுதினா னடியேன்
என்தலை விதியோ எவர்செய்யும் சதியோ
எந்தனுக்குக் கொள்ளி யிடுவாயென் றெண்ணினேன்
இபபோதுஉந்தனுக்குகொள்ளி உகந்துநான்வைக்கலானேன்

மிஸ். P. ருக்மணி பாடியது.

பிளேட் நெ, 2243 { கதவைத்திறக்கும் / எழுபிள்ளை அணணி

நல்லதங்காள் டிராமா.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

கதவைத் திறவும் அண்ணி ஓ அண்ணியரே
கதவைத் திறவும் கத

அநுபல்லவி.

திறவும் கதவை அண்ணி
தெருவாசற் படி வந்தேன்
அரிய யென் மக்களுடன்
அவதி மிகக் கொண்டேன் கத

சரணம்.

கதவைத் திறவும் அண்ணி
கடுகெனவே இந்த
ததியில் வந்து எந்தனை
தான் காணவும் நீ கத

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

ஏழுபிள்ளைக் காரியடி அண்ணியரே-அண்ணி
ஏனோ கதவடைத்தாய் அண்ணியரே

பாழும் பஞ்சத்தால் வாடி அண்ணியரே-அண்ணி
பாலருடனே வந்தேன் அண்ணியரே

நாலுநாள் நடந்தோடி அண்ணியரே-அண்ணி
நாடியே தேடிவந்தோம் அண்ணியரே

பாலர் பசியால் வாடி அண்ணியரே-அண்ணி
பரதவிக்கின்றாரோடி அண்ணியரே ஏ

விசலூர். N. சுப்பிரமணியபாகவதர்

பாடியது.

பிளேட். நெ. 2781 இராகம்-பியாக்-தாளம்ஆதி

பல்லவி.

இதுதானோ தில்லை ஸ்தலம் இத்தனை நாளுமறியேன்
இதுதானோ தில்லை ஸ்தலம் இது

அநுபல்லவி.

அதுவோ இதுவோ வென் றலைந்திடும் பேயனைக்
கதி தருவேனென்று கைகாட்டி யழைக்குதே இது

காசினியிலிதைக் கைலையென்றெல்லோரும்
பேசக் கேட்டதேயன்றி பேணிப்பார்த்தறிகிலேன் இது

பிளேட் நெ, 2781 தேசிகதோடி தாளம் ஆதி.

அடித்தது போதுமையா என்னை
அடித்தது போதுமையா அ

அநுபல்லவி.

அடித்தாலும் உங்கள் கைவலியாதோ
அடிமை வேலை செய்யு மென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென் மனதிற் படாதோ
பாவியெனக்கு மினி மேற்றெறியாதோ அ

நல்ல வரேமுங்கள் மனதுப் பிரகாரம்
நடக்காம லிருந்தது வப சாரம்
சொல்லத் தெரியுமோ எனக்குபகாரம்
சுகிர்த சாவி யுங்க ளாலேயிந்நேரம் அ

திருச்செந்தூர். ஷண்முகவடிவு

பாடியது.

பிளேட் நெ, 5584 { ஆராரேனக்கேன்ன
சித்த மேப்படியோ

தாயுமானவர் பாடல்.

ஆராரெனக்கென்ன போதித்து மென்னவென்
அறிவினை மயக்க வசமோ
வண்ட கோடியையெலாங் கருப்பவரைப் போலவு
மடுக்கடுக்கா வமைத்துப்

போராம னின்பர வெளியிலே மனவெளி
பிறங்கு வதலா தொன்றினும்
பின்னமுற இருவாது நன்னயத் தாலினிப்
பேரின்ப முத்தி நிலையுந்

தாராது தள்ளவும் போகாது நாலது
தள்ளினும் போகே னியான்
றடையேது மில்லையாண் டவனடிமை யென்னுமிரு
தன்மையினு மென் வழக்குத்

தீராது விடுவதிலை நடுவான கடவுளே
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயா னந்தமே.

இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சித்த மெப்படியோ
சின்மயானந்த சொரூபா சித்த

அநுபல்லவி.

எத்தனைவிதம் செய்திட்டாலும்
ஏனோ மனதில்லை போலும் சித்த

சரணம்.

என்வினை தீரவே யான்
இறைவா நான் கெஞ்சினேன்
முன்னவா தீர்ப்பா யென்று
மூர்த்தியே கெஞ்சினேன்
சின் முத்திரை தரித்த
சிற்சுடரே யஞ்சினேன்
கன்மமுந் தீர்ப்பா யென்றே
கரித்தே மன மிஞ்சினேன் சித்த

ஆர்மோனியம்

உரையூர் T. M. காதர்பாஷா

பாடியது.

பிளேட் நெ. 2188 பார்க்கவேணும்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பார்க்கவேணும் பார்க்கவேணும் என்று
பழனிமலை அருகோடி நின்று பார்

அநுபல்லவி.

பன்னிருகரத்தோனே என்னிருகரத்தை போற்றி என்றும் பார்

சரணம்.

இன்னும் மன மிரங்க வில்லையா
ஏழை என்னை ஆதரிக்க வில்லையா
ஏங்கிவந்தேன் பாதமதை
தாங்கவந்தேன் ஒருமொழி சொல்லையா பார்

பெங்களூர். தாயி பாடியது.

பிளேட் நெ. 3203 அம்பலத்தரசே அருமருந்தே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபி.

அம்பலத்தரசே யரு மருந்தே
    ஆனந்தத்தேனே யருள் விருந்தே
பொது நடத்தரசே புண் ணியனே
    புலவரெலாம் புகழ் கண் ணியனே
மலைதரு மகளே மட மயிலே
    மதிமுக வமுதே யிளங் குயிலே
ஆனந்தக் கொடியே யிளம் பிடியே
    அற்புதத்தேனே மலை மானே
சிவ சிவ சிவ சிவ சின் மய தேஜா
    சிவ சுந்தர குஞ்சித நடராஜா
படன விவேக பரம்பர வேதா
    நடன சபேச சிதம்பர நாதா
அரபிர மாதியர் தேடிய நாதா
    அரகர சிவசிவ ஆடிய பாதா
அந்தண வங்கண வம்பர போகா
    அம்பல நம்பர அம்பிகை பாகா
அம்பர விம்பர சிதம்பர நாதா
    அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
    சங்கர சங்கர சங்கர நாதா

செருகுளத்தூர் சாமா பாடிய

புதிய பாட்டு.

பிளேட் நெ. 3216 தந்தானத்தானன.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தானத் தானன தானன
என்றூடும் மாமயில் வாகனா

அநுபல்லவி.

தற்பரனே பொற்பதமே
தஞ்சம் இதிலென வஞ்சம்
அருள்புரி கொஞ்சம்
தகிட தகதிமி ததிங்கிணத்தோம்
ததிங்கிணத் தோம்
ததிங்கிணத் தோம் தந்

சரணம்.

குன்றந் தங்குஞ் சரவணபவ
என்றும் பொங்குந் துதிகமழ்திரு
குருபரனே அறுமுகனே
குகக்கடவுளே உனதொரு
துணைக்கதிபெற வெனதுள விருப்பமிதுவே
தி ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம் தந்

சங்கீதவித்வான் V-D. சாமிபாகவதர்

பாடியது.

பிளேட் நெ. 3470 சிதம்பரம் போகாதே.

இராகம்-அசாவேரி-தாளம்.

பல்லவி.

சிதம்பரம் போகாதே நந்தா சிதம்பரம் போகாதே சி

அநுபல்லவி.

சிதம்பரம் போனால் இதம் பெறலாமென்று
சேதி சொல்லுரு யுந்தன் ஜாதிக்கடுக்குமோ சி

சரணம்.

நாற்றைப் பிடுங்கி நண்ணி நடவேணும்-இந்த
நஞ்சை வயலைச் சற்றே யுழவேணும்
பார்த்துப் பரம்படித்துப் பழுது வராமல்
பாயும் சலம் விட்டு பார்த்திடுவாய்-நீ சி

கள்ளக் கும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமெல்லா மிங்கே காட்டாதே
மெள்ளச் சொல்லடா முழு மூடா கீழே
தள்ளி விட்டு வுன்னைத் தகும்படி செய்வேன் சி

கொடிமுடி

K. B. சுந்தராம்பாள் பாடியது.

பிளேட் நே. 11, இராகம் கல்யாணி-தாளம் ஆதி.

பல்லவி.

ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே பெண்ணே
ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே ஆய

அநுபல்லவி.

ஆவியே ஆருயிர் சஞ்சீவியே மன்மதனென்னும்
பாவியே மலர்க்கணேயே தூவியே
வாட்டுகிறான் கண்ணே ஆயலோட்டும் பெண்ணே ஆய

சரணம்.

பாயுந்தென்றலாலே அடி பாயுந்தென்றலாலே
பாயுந்தென்றலாலே பாங்கியே
மெத்தவும் மனம் சோங்கியே
பங்கய மோகனுங்கியே மனத்துயரம் ஓங்கியே
மலர்க்கணேயே தூவியே வாட்டுகிறான் கண்ணே ஆய

கழுகாசலத்தில் சுப்ரமணியருக்கும் நாரதருக்கும் தர்க்கம்

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

சுப்—மார்க்கத்திற் கண்ட கனிதனக்குற்ற
சிலாக்கிய மென்ன முனியே

நா—அதை நோக்கும் பொழுதே புலன்கள்
ருசிதரும் தித்திக்கும் தேன் கனியே

சுப்—பக்ஷிகள் கண்டாலன்னேரமதைக் கோரி
பக்ஷித்திடாதோ சொல்வீர்

நா—பக்ஷிகள் கண்டால் பறந்தோடும் ஆகையால்
பக்ஷமுடன் செல்லுவீர்

சப்—எட்டாத கொம்பிலிருக்கு மக்கனியை
எப்படிக் கொய்திடலாம்

நா—எட்டும் படிக்கிரு கொம்புண்டதைப்பற்றி
ஏறிப் பறித் திடலாம்

சப்—மிக்க மேன்மையுள்ள அக்கனிச் செவ்விதம்
மேவுங் குறிக ளுண்டோ

நா—குளிர்ந்த முகமுண்டு கொங்கை யிரண்டுண்டு
கோதில்லாக் கண்களுண்டு

சப்—பெண்களுக்குள்ள குறிகளிருப்பதால்
பேசுமோ வாய் திறந்து

நா—ராகப் பெண்களுக்கெல்லாம் சுவைதருமே அந்தப்
பைங்கிளி வாய் திறந்தால்

மதருவ்ஸ்.

S. S. மணி அய்யர் பாடியது.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்.

பாக்கு வெத்திலையாம் மச்சாங் கேக்கவெக்கமோடா
கேக்க வெக்கமோடா
மச்சாங் கேக்க வெக்கமோடா பா

கேக்க வெக்கமோடா மச்சாங்
கேக்க வைச்சுகோடா
பாக்கு நல்ல பாக்கு
கலி பாக்கு வெத்திலை பாக்கு
கொட்டை பாக்கு வெத்திலையாம் மச்சாங்
கேக்க வெக்கமோடா
மச்சாங் கேக்க வைச்சுக்கோடா பா

எட்டாம்பாகம் முற்றிற்று.